969 மார்ச் 28]

வடாற்காடு மாவட்டத்தில் மையச் சமயற்கூடம்

*520 வினா—திரு. எஸ். ஜே. இராமசாமி : மாண்புமிகு கல்வி—தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆர்க்காடு மாவட்டத்தில் மையச் சமையற்கூடம் அமைப்பதற்கென அமெரிக்க உலக கூட்டுறவு (கேர்) நிறுவனத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டு, அம் மாவட்ட கலெக்டரிடமிருந்து பரிந்துரையுடன் வந்துள்ள இடங்களின் விவரங்கள் யாவை ?

(இ) அவை எப்போது எந்த எந்த இடங்களில் ஆரம்பிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) :—அடுத்த ஆண்டில் வடஆற்காடு மாவட்டத்தில் மூன்று மையச் சமயற்கூடங்கள் காட்பாடி ஒன்றிப்புகளில் அமைக்கப்படும். வாலாஜா, வேம்பாக்கம் ஆகிய ஊராட்சி

கல்வி இலாகா அலுவலர்கள்

*521 வினா—திரு. பி. வேலுசாமி : மாண்புமிகு கல்வி தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கல்வி இலாக்காவில் வேலை பார்க்கும் ஆசிரியர்கள், மற்றுமுள்ள அதிகாரிகள் சிப்பந்திகள் வேலைக்கு சேர்ந்து எவ்வளவு ஆண்டுகளில் நிரந்தரம் செய்யப்பட வேண்டும் என்ற வரம்பு சர்க்கார் வகுத்துள்ளது ?

(இ) ஆம் எனில், நிரந்தரம் செய்யப்பட வேண்டிய வரம்பு கடந்தும் வேலை நிரந்தரம் செய்யப்படாமல் உள்ளவர்களுக்கு நிரந்தரம் செய்ய சர்க்கார் எடுத்துள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்வி எழவில்லை.

திரு. பி. வேலுசாமி : இந்தக் கல்வி இலாகாவில் பணிபுரிகிற ஆய்வாளர்கள், துணை ஆய்வாளர்கள் இவர்கள் எட்டு ஆண்டுகள், பத்தாண்டுகள் சர்வீஸாகியும் கூட நிரந்தரம் செய்யப்படாமல் இருக்கிறார்கள். ஆகவே அப்படிப்பட்டவர்களை நிரந்தரம் செய்வதற்கு முயற்சி உண்டா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : எப்போதைக்கெப்போது நிரந்தரம் செய்யவேண்டும், கன்பர்மேஷன் அல்லது ரெகுலரைஸேஷன் செய்ய வேண்டும் என்பதற்கு விதிமுறைகள் இருக்கின்றன. பொதுவாக இதில் சிக்கல் ஏற்படுவது எந்த வேலையில் நியமிக்கிறோமோ அந்த வேலை நிரந்தரமாகயிருந்தால் உடனடியாக நிரந்தரமாக்கப்படுகிறது, அது இடைக் கால வேலையாக இருந்தால், அதாவது டெம்பரரியாக இருந்தால், கொஞ்சம் காலதாமதம் ஏற்படுகிறது. அப்படிப்பட்ட காலதாமதம் ஏற்படாமல் அடிக்கடி பரிசீலித்து கன்பர்மேஷன் அல்லது ரெகுலரைஸேஷன் செய்ய வேண்டுமென்று சர்க்கார் அறிவித்து வருகிறது.

திரு. பெ. சீனிவாசன் : கன்பர்மேஷன் அல்லது ரெகுலரைஸேஷன் செய்வதற்கு ஏதாவது குறிப்பிட்ட விதிகள் இருக்கின்றனவா அல்லது, குறிப்பிட்ட காலவரை இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஒவ்வொரு வேலைக்கும் தனித் தனி விதிமுறைகள் இருக்கின்றன.

திரு. கு. கிருஷ்ணமூர்த்தி : ஜில்லா போர்டிலிருந்து கல்வி இலாகாவிற்கு மாற்றப்பட்ட அதிகாரிகள், ஆசிரியர்கள் இவர்களுக்கும் கல்வி இலாகாவில் பணிபுரிகிற ஆசிரியர்கள், மற்றவர்களுக்கும் இடையே தாரதம்மியம் இருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மாவட்டக் கழகம் நடத்துகிற உயர் நிலைப் பள்ளிகளை அரசாங்கம் எடுத்துக் கொண்டிருக்கிறது. அதில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு அரசாங்கத்தில் பணிபுரியும் ஆசிரியர்களுக் கொப்ப தரவேண்டுமென்ற கோரிக்கை இருந்து வருகிறது. அதை ஏற்கிற முகத்தான் இருவருக்கும் ஏதாவது சங்கடங்கள் ஏற்படக்கூடாது என்பதற் காக இருதரப்பாரையும் கல்வி ஆலோசகர் சந்தித்து இருவரும் ஒத்துக் கொள்ளக்கூடிய வழி முறைகளை வகுத்து ஏற்பாடு செய்து வருகிறார்கள். விரைவில் அது பூர்த்தியாகிவிடும்.

திருமதி கே. பி. ஜானகியம்மாள் : தனியார் நடத்தும் ஆலைகளிலும் மற்ற பாக்டரிகளிலும் வேலை செய்யக்கூடிய தொழிலாளர்களுக்கு ஒரு வருடத்திற்கு மேல் வேலை செய்தால் அவர்களை நிரந்தரமாக்கவேண்டு மென்று தொழிற் சட்டங்கள் கூறுகின்றன. அதேபோல் ஆசிரியர் களுக்கும் மற்றும் சர்க்கார் சிப்பந்திகளுக்கும் ஏதாவது குறிப்பிட்ட வருடத்திற்குள் வேலை செய்தால் அவர்களின் வேலை நிரந்தரமாக்கப்படும் என்பதற்கான ஒரு சட்டம் பிறப்பிப்பதற்கு அரசுக்கு யோசனை உண்டா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போது கூட நிரந்தரம் இல்லை என்று சொல்வதற்கில்லை. ஆசிரியர்களை வேலைக்கு நியமிக்கும்போது அந்த ஆசிரியர்களை நிரந்தரமாக நாம் எடுத்துக்கொண்டிருந்தால் உட னடியாக அவர்களுக்கு நிரந்தரமாகிவிடும். டெம்பரரி பேஸிஸில் வேலைக்கு அமர்த்தும்போது கொஞ்சம் காலதாமதமாகிறது. அப்படி காலதாமதம் ஏற்படாமல் பார்த்துக்கொள்ளும்படி அடிக்கடி சர்க்கார் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அறிவுறுத்தி வருகிறது.

ஆசிரியர் பயிற்சி

***522 வினா :—திரு. பெ. மலைச்சாமி :** மாண்புமிகு கல்வி தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

நத்தம், அல்லது மேலூரில் பெண்களுக்கான ஆசிரியர் பயிற்சிப் பள்ளி துவங்குவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் ; இல்லை.

திரு பெ. மலைச்சாமி : ஆசிரியர் பணிக்கு ஆண்களைவிட பெண் களால்தான் அதிகம் பயன் இருக்கிறது என்ற கருத்து இருக்கிறது; இதை வலியுறுத்துகிற அளவில் பெண்களுக்கு இத்தகைய பயிற்சி பள்ளிகளைத் துவக்க அரசாங்கம் உத்தேசித்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போது ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் இருந்துகொண்டுதான் இருக்கின்றன. இப்போதுள்ள பிரச்னை எல்லாம் பயிற்சி பெற்று வெளியே வந்தவர்களுக்கு பூர்ணமாக வேலை கொடுக்க முடியவில்லை என்ற காரணத்தால் வருடந்தோறும் எவ்வளவு ஆசிரிய ஆசிரியைகள் வேண்டுமென்று கணக்கிட்டு அதற்கேற்றாற்போல் இடங்களை ஒதுக்கி வருகிறோம், கூட்டுகிறோம், அல்லது குறைத்து வருகிறோம்.

ஹாஜி மா. மு. பீர் முஹம்மது : ஆரம்பப் பள்ளி மாணவர்களைப் பயிற்றுவிப்பதற்கு ஆசிரியர்களை விட ஆசிரியைகள் சிறந்த முறையில் பயிற்றுவிக்கிறார்கள் என்ற அபிப்பிராயம் கல்வியாளர்களிடம் இருக்கிற காரணத்தினால் ஆசிரியர் பயிற்சிக்கு அதிகம் மாணவர்களை எடுப்பதைவிட அதிகமான மா ணவிகளை எடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஆண்களையே அப்படி முற்றிலும் வெறுப்பதற்கு நான் தயாராகயில்லை. ஆண்களிலும் திறமையான வர்கள் இருக்கிறார்கள், பெண்களிலும் திறமையானவர்கள் இருக்கிறார் கள். இரண்டிலும் மோசமானவர்களும் இருக்கிறார்கள்.

திரு. என். எஸ். வி. சித்தன் : பெண்களுக்கென ஆசிரியர் பயிற்சிப் பள்ளி திறப்பது ஒருபுறமிருக்க ஏற்கனவே உள்ள சிலயிடங்களில் —திருமங்கலத்தில் 80 ஆக இருந்த இடம் 40 ஆக குறைக்கப்பட்டிருக் கிறதே அதை மீண்டும் 80 ஆக உயர்த்த ஏதாவது செயற்குறிப்பு இருக்கிறதா ?